# இலக்கியத்தில் தூய அன்னை மரியா

## (Holy Mother Mary in Literature)



பதிப்பாசிரியர்

அருள்தந்தை முனைவர் சி. மணி வளன் சே.ச.


கிறித்தவ ஆய்வு மையம்

Centre for Christian Research (CCR)

தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி - 620 002

## நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **இலக்கியத்தில் தூய அன்னை மரியா** |
| பதிப்பாசிரியர் | : | அருள்தந்தை முனைவர் **சி. மணி வளன், சே.ச.** |
| நூல் பொருள் | : | கிறித்தவ இலக்கியக் கட்டுரைகள் |
| முதற்பதிப்பு | : | செப்டம்பர் 2018 |
| மொழி | : | தமிழ் |
| உரிமை | : | கிறித்தவ ஆய்வு மையம் |
| நூல் அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | (xiv+278) |
| அச்சிட்டோர் | : | தி பிரிண்டிங் கவுஸ், காஜாமலை, திருச்சி-23. |
| நூல் வெளியீடு | : | கிறித்தவ ஆய்வு மையம் தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620 002. |
| ISBN | : | 978-93-87360-14-3 |
| விலை | : | 200/- |


## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Name of the Book | : | **Holy Mother Mary in Literature** |
| Editor | : | Rev. Dr. S. Mani Valan SJ |
| Print | : | September 2018 |
| Language | : | Tamil |
| Copy Right | : | Centre for Christian Research (CCR) |
| Pages | : | (xiv+278) |
| Press | : | The Printing House Kajamalai, Tiruchirappalli-23. |
| Book Size | : | Dimmy |
| Published by | : | Centre for Christian Research (CCR) St. Joseph's College (Autonomous) Tiruchirappalli-620 002. |
| ISBN | : | 978-93-87360-14-3 |
| Price | : | 200/- |

11. இலக்கியங்களில் தூய அன்னை மரியா — 64
முனைவர் ஆ.அருள் செல்வி

12. அன்னை மரியா அந்தாதியில் மரியின் அருள் — 70
ஆ.மெர்சி ஆஞ்சலா

13. தமிழகக் கிறித்தவ நாட்டுப்புறப் பாடல்களில் அன்னை மரியா — 76
அருள்தந்தை முனைவர் சி.மணி வளன் சே.ச.

14. மாதாயணத்தில் அன்னை மரியா — 83
முனைவர் இ. எலியாஸ்

15. பாமாலை சூட்டி வாழ்ந்த பூமாலை — 87
அருட்சகோதரி.முனைவர்.இ.அல்போன்சாள்

16. மரியாள் மனித இனத்தின் மாதிரிகை — 93
வி.லீமா ரோஸ்

17. அன்னை மரியாளின் பாடல்களில் இறைப் பெருமை — 99
முனைவர் சு.கணேஷ்

18. அன்னை மரியின் பெருமை, மகிமை, புதுமை — 104
மருத்துவர் ஆர்.மரியசெல்வம்

19. மரியன்னைக்கு மாற்றில்லை — 117
முனைவர்.பா.லயோலா சூலியட் மேரி

20. அருள்நிறை மரியம்மை காவியத்தில் 'அன்பு' — 121
சா. சாலமன்

21. கன்னி மரியாளின் பண்புகள் : தேம்பாவணியை முன்வைத்து... — 125
முனைவர் மா.பரமசிவன்

22. கவிஞர் முனைவர் பத்திநாதன் - கன்னிமரி காவியம் — 132
ஜோ.ஹெலன்

# 12.அன்னை மரியா அந்தாதியில் மரியின் அருள்

ஆ.மெர்சி ஆஞ்சலா,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
பாத்திமா கல்லூரி, மதுரை.

## முன்னுரை

எழில் கொஞ்சும் நல்லுலகைப் படைத்த கடவுள் அவ்வுலகத்தை ஆண்டு அனுபவிக்க மக்களைப் படைத்தார். தனது பேராசையின் நிமித்தம் பாவத்தில் விழுந்த ஆதாம்,ஏவாள் தொடங்கி உலகில் பாவத்தின் ஆளுகை மேலோங்கியது. அவர்களை நல்வழிப்படுத்த இறைவாக்கினர்களை கடவுள் அனுப்புகிறார். அவர்களுக்குச் செவிசாய்க்கா நிலையில் தம் மகனை அன்னை மரியின் மூலமாக உலகிற்குக் கொடுக்கிறார். அன்னையைத் தேர்ந்து கொள்ளக் காரணம் அவளின் அருட் குணங்களாகும். இதனை 'அன்னை மரியா அந்தாதி'என்ற நூலின் மூலம் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அன்னை மரியா

இறைப்பற்றுதலோடு தூய்மையும் கற்பும் பொறுப்பும் நிறைந்தவள் அன்னை. ஒவ்வொரு குழந்தையும் பிறப்பிற்குப் பின்னர் அன்னை அடையாளப்படுத்தப்படுவர். ஆனால் இயேசுவின் பிறப்பிற்குமுன்பே இறைமகனின் அன்னை, மரியாள் என்று முன்னறிவிக்கப்படுகிறார். அப்பேறுபெற்ற அன்னை எள்ளளவும் தனது கடமைகளில் குறைவுபடாமல் இயேசுவுக்கு எப்பொழுதும் பலமாக விளங்கினார். மகனின் இறுதிப் பயணத்தில் தனது உடனிருப்பைக் காட்டியதோடு இயேசுவால் உலகிற்கே அன்னையாகக் கொடுக்கப்பட்டார். எத்தீங்கும் நேரிடாமல் நம்மை காக்கும் அன்னை இன்றும் மாரியாக அருட்கொடைகளை வழங்குகின்றாள்.

## அந்தாதிவிளக்கம்

"அந்தம் முதலாகத் தொடுப்பது அந்தாதி"(யாப்.கா.நூற்)

ஒருபாடலின் இறுதி எழுத்தோ, சீரோ, அசையோ அடியோ அடுத்துப் பாடலின் முதலாவதாக அமையும் படித் தொடுத்து பாடுவதே அந்தாதி ஆகும். அன்னை மரியாள் அந்தாதியும் இந்த அமைப்பு முறையிலே ஆசிரியரால் உருவாக்கப்பட்டுள்ளது. அன்னைக்குச் சிறப்பு சேர்க்கும் இந்நூல் சிற்றிலக்கிய வகையிலே அன்னை புகழ்பாடுகிறது.